**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.84 & 85 /2024 – PW- 4**

| | |
|---|---|
| Name | திரு. விமல் |
| Husband/Father Name | அன்னியப்பன் |
| Village /Area | திருமால்பூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 40 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.07.2025.

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 20.06.2021 அன்று எனது அண்ணன் குமார் என்பவரும் அண்ணி ஜெயக்கொடி என்பவரும் எனக்கு தொலைபேசி மூலம் அவரது மகன் கௌதமை வெட்டி கொலை செய்து விட்டதாக தகவல் தெரிவித்தனர். யார் யார் இந்த சம்பவத்தை செய்தார்கள் என்று கேட்டதற்கு சரத், தீனா, தினேஷ், பார்வேந்தன், விஜயகுமார், திலீப் ஆகிய 8 பேர் இந்த சம்பவத்தை செய்தார்கள் என்று சொன்னார்கள் இது சம்பந்தமாக எனது அண்ணி ஜெயக்கொடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் 1 முதல் 8 வரை தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சாட்சி குமார், ஜெயக்கொடி எனக்கு இரத்த சம்பந்தப்பட்ட உறவு என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்தில் சவத்தை மாலை 06.00 மணியளவில் பார்த்தேன். நான் சென்ற போது சம்பவ இடத்தில் சுமார் 30 –40 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவ இடம் செல்வதற்கு முன்று

வழிகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் பார்த்த போது சவம் எந்த திசை நோக்கி இருந்தது என்றால் வடக்கு திசையில் காலும் தெற்கு திசையில் தலையும் இருந்தது. நான் சம்பவ இடம் சென்ற போது இறந்த கௌதமின் தாயாரும் அசா.2 குமாரும் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் செல்லும் போது அசா.1 சவத்திற்கு அருகே புரண்டு அழுதுக்கொண்டிருந்தார். நான் சம்பவ இடத்தில் அசா.1 மற்றும் அசா.2 அவர்களின் ஆடைகளில் இரத்த கரை இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அதே போல் யார் கைகளிலாவது இரத்த கரை படிந்திருந்தா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அசா.1, அசா.2 காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்த உடன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். சவம் இருந்த இடத்தில் நான் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் இருக்கும் வரை போலீசார் சவத்தினுடைய தலை மற்றும் கால் எந்தெந்த திசைகளை நோக்கி இருந்தது என்றும் சவத்தினுடைய உடலில் எந்தெந்த இடங்களில் காயங்கள் இருந்தது என்று எழுதவில்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி நேரடியாக பார்க்கததால் எந்த விவரமும் தெரியாது என்றும் அசா.1 மற்றும் அசா.2 எனத உறவினர்கள் என்பதால் அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**ஓம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**